**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 01.05.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

கௌதம புத்தரின் பிறந்த நாளான இன்று புத்த பூர்ணிமா நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

உழைப்பாளர் தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மதுரை சித்திரை திருவிழாவின் முதன்மை நிகழ்ச்சியான கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் வைபவம் இன்று காலை கோலாகலமாக நடைபெற்றது.

நாட்டின் வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று இந்திய எண்ணெய் நிறுவனம் தெரிவித்துள்ளது.

*புத்த பூர்ணிமா -1 (05)*

புத்த பூர்ணிமா இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. கௌதம புத்தர் பிறந்த நாளை குறிக்கும் வகையிலும், புத்தர் ஞானம் பெற்ற நாளை குறிக்கும் வகையிலும், புத்த பூர்ணிமா இன்று கொண்டாடப்படுகிறது.

இது குறித்த கூடுதல் தகவல்கள் … (வாய்ஸ்)

*புத்த பூர்ணிமா – வாய்ஸ் 2  (18)*

(வாய்ஸ்)

இந்தியா, நேபாளம், பூட்டான், இலங்கை போன்ற நாடுகளில் இது ஒரு முக்கிய பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரெளபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு தலைவர் திருமதி திரெளபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், புத்தரின் கருணை, அகிம்சை, அமைதி, ஞானம் குறித்த போதனைகள், மனித குலத்திற்கு தொடர்ந்து வழிகாட்டும் என்று கூறினார். புத்தரின் வாழ்க்கை, போதனைகள், நல்லிணக்கம், அகிம்சை, நேர்மை பாதையில் முன்னேற உத்வேகம் அளிக்கட்டும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், அமைதி, கருணை, நல்லெண்ணம் ஆகிய பாதையில் நம்மை நடத்த ஊக்குவிக்கும் இந்நாளில், புத்தரின் கொள்கைகளை பின்பற்ற நாம் அனைவரும் உறுதியேற்போம் என்று பிரதமர் கூறியுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள செய்தியில், புத்தரின் வாழ்க்கை, சமூகநலனுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாக கூறினார். இதனிடையே, புத்த பூர்ணிமாவையொட்டி, லடாக் லே பகுதியிலுள்ள Jivatsal-ன் புத்தரின் புனித திருவுருவச் சின்னங்களின் கண்காட்சியை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா திறந்து வைத்தார்.

*புத்த பூர்ணிமா – வாய்ஸ் 3 (03)*

இந்த கண்காட்சி வரும் 14ஆம் தேதி  வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் லடாக், துணைநிலை ஆளுநர் திரு. வினய் குமார் சக்சேனா, புத்த துறவிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*உழைப்பாளர் தினம் (12)*

உழைப்பாளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள செய்தியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, தொழிலாளர்களின் நலனுக்காக, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார். மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், வெளியிட்டுள்ள செய்தியில், சுயசார்பு மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட, உழைப்பாளர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று கூறியுள்ளார். மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், நாட்டின் வளர்ச்சிக்கு தங்களது கடின உழைப்பை வழங்கி வரும், உழைப்பாளர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

*அமித் ஷா (08 )*

போதைப் பொருள் தடுப்பு பிரிவு மும்பையில் ஆயிரத்து 745 கோடி ரூபாய் மதிப்பிலான கொக்கேன் போதைப் பொருளை பறிமுதல் செய்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 349 கிலோ உயர்தர கொக்கேன் கைப்பற்றப்பட்டுள்ளதாக கூறினார். போதைப்பொருள் புழக்கத்திற்கு எதிராக அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

*இந்தியா-தான்சானியா (19)*

இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்தியா-தான்சானியா கூட்டு வர்த்தகக் குழுவின் 5வது அமர்வு தான்சானியாவில் நிறைவடைந்தது. 2017 ஆகஸ்ட் மாதம் புது தில்லியில்

நடைபெற்ற முந்தைய அமர்வுக்குப் பிறகு எட்டப்பட்ட முன்னேற்றங்களை இந்த அமர்வு ஆய்வு செய்ததாக வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்தது. 2024-25ல் எட்டு பில்லியன் டாலர்களுக்கும் அதிகமாக இருந்த இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், 2025-26ல் ஒன்பது பில்லியன் டாலர்களைத் தாண்டியுள்ளதாக அமைச்சகம் தெரிவித்தது. உள்ளூர் நாணயங்களில் வர்த்தகங்களை ஊக்குவித்தல், இந்தியத் தொழிலதிபர்களுக்கு நீண்ட கால வணிக விசாக்களை எளிதாக்குதல், மருந்துத் துறையில் ஒழுங்குமுறை ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் சுகாதாரம், ஆயுஷ், கல்வி, கப்பல் கட்டுதல் ஆகிய துறைகளில் திறன் மேம்பாடு ஆகியவை குறித்தும் கூட்டத்தின் போது விவாதங்கள் நடைபெற்றன. புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கம் உள்ளிட்ட துறையில் ஒத்துழைப்பு, இரத்தினக்கல் துறையில் மதிப்புக்கூட்டல், இரத்தினக்கல் ஏற்றுமதி தொடர்பான ஒழுங்குமுறை மேம்பாடுகள், மற்றும் திறன் மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்புக்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

*பியூஷ் கோயல் (07)*

இந்தியா-இங்கிலாந்து விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தத்தை சிறந்த முறையில் கையாள்வது குறித்து, இரு நாட்டு வர்த்தகத் துறை அமைச்சர்களும் காணொளி மூலம் ஆலோசனை மேற்கொண்டனர். சமூக வலைதளப்பதிவில் இதனை தெரிவித்த மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், இரு நாடுகளுக்கிடையே வர்த்தக முதலீட்டை மேலும் வலுப்படுத்துவது தொடர்பான, வழிமுறைகள் குறித்து ஆலோசித்ததாக கூறியுள்ளார்.

*மதுரை அழகர் (07)*

மதுரை சித்திரை திருவிழாவின் முதன்மை நிகழ்ச்சியான கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் வைபவம் இன்று காலை கோலாகலமாக நடைபெற்றது. ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையை, ஏற்றுக்கொண்டு தல்லாக்குளம், கருப்பண்ண சாமி கோவிலிலிருந்து

ஆயிரம் பொன் சப்பரத்தில் புறப்பட்ட கள்ளழகர் அதிகாலை பச்சைப் பட்டுடுத்தி, தங்கக் குதிரை வாகனத்தில் வைகையாற்றில் இறங்கியதை பக்தர்கள் தரிசித்தனர்.

*மஹாராஷ்டிரா (05)*

மஹாராஷ்டிரா மாநில நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திர மோடி உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
இது குறித்த செய்தி தொகுப்பு … **(வாய்ஸ்)**

*மஹாராஷ்டிரா வாய்ஸ் (10)*

**(வாய்ஸ்)**

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், சத்ரபதி சிவாஜியின் வீரம், தேசப்பற்று, தைரியம், சுயமரியாதைக்கு இம்மாநிலம் பெயர் போனதாக கூறியுள்ளார். மஹாராஷ்டிராவைச் சேர்ந்த மாபெரும் தலைவர்களான, மகாத்மா ஜோதிபா ஃபூலே, சாவித்ரி பாய் ஃபூலே, லோகமான்ய பாலகங்காதர திலக், டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் ஆகியோர் நாட்டு மக்களுக்கு உத்வேகம் அளித்து வருவதாக கூறினார். குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், கலாச்சாரம், கல்வி, அறிவியல், இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மஹாராஷ்டிரா முன்னோடி மாநிலமாக திகழ்வதாக கூறியுள்ளார்.

*எல்.பி.ஜி. (12)*

நாட்டின் வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று இந்திய எண்ணெய் நிறுவனம்

தெரிவித்துள்ளது. 33 கோடி நுகர்வோருக்கு எவ்வித மாற்றமுமின்றி சிலிண்டர் கிடைத்து வருவதாகவும், பெட்ரோல், டீசல் சில்லரை விற்பனை விலை எவ்வித மாற்றமுமின்றி தொடர்வதாகவும் இந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதனிடையே, நாட்டில் டீசல் மற்றும் விமான எரிபொருள் மீதான ஏற்றுமதி வரிக்குறைப்பு இன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இருப்பினும், பெட்ரோல் ஏற்றுமதி வரியில் எந்த மாற்றும் செய்யப்படவில்லை. மேற்காசிய சூழல் பின்னணியில் பெட்ரோலிய எரிபொருட்களின் உள்நாட்டு இருப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

*கைலாஷ் மானசரோவர் (09)*

கைலாஷ் மானசரோவர் புனித யாத்திரை அடுத்த மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை நடைபெறவுள்ளது. தலா 50 யாத்ரீகர்களைக் கொண்ட 10 குழுக்கள் உத்தராகண்ட் வழியாகவும், இதர 10 குழுக்கள் சிக்கிம் வழியாகவும், கைலாஷ் சென்றடைவார்கள் என்று மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. யாத்திரை செல்ல விரும்புவோர், kmy.gov.in என்ற இணையதளத்தில் வரும் 19ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது. சீன அரசுடன் இணைந்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

*அமலாக்கத்துறை (18)*

நிதித்துறை இணை அமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி இன்று, அமலாக்கத்துறையை நிதிக் குற்றங்களுக்கு எதிராக தேசத்தைப் பாதுகாக்கும் கேடயம் என்று வர்ணித்தார். புது தில்லியில் நடைபெற்ற 70ஆவது அமலாக்கத்துறை தினக் கொண்டாட்டத்தில் அமைச்சர் உரையாற்றினார். அமலாக்கத்துறைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், பணமோசடி, ஹவாலா பரிவர்த்தனைகள், பினாமி சொத்துக்கள் மற்றும் பெருநிறுவன மோசடிகள் போன்ற நிதிக்குற்றங்களை எதிர்த்துப்

போராடுவதை நோக்கமாகக் கொண்டவை என்றும், தனிநபர்களைக் குறிவைப்பதை அல்ல என்றும் அவர் வலியுறுத்தினார். வலுவான அமலாக்கத்தின் அவசியத்தை வலியுறுத்திய அவர், இத்தகைய குற்றங்கள் பொருளாதாரத்திற்கும் சாமானிய குடிமக்களுக்கும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன என்று குறிப்பிட்டார். இந்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி, அமலாக்கத்துறை சுமார் 2.36 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை முடக்கியுள்ளது என்றும், அதில் 63 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை வங்கிகள், முதலீட்டாளர்கள் மற்றும் வீடு வாங்குபவர்கள் உள்ளிட்ட உண்மையான உரிமையாளர்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் எடுத்துரைத்தார்.

*இந்தியா-ஆப்பிரிக்கா உச்சி மாநாடு (08)*

வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங், ஆப்பிரிக்க ஒன்றியத்தின் நிரந்தரப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் புருண்டியின் தூதருமான திரு. வில்லி நியமித்வே தலைமையில் வந்த ஆப்பிரிக்க ஒன்றிய ஆணையத்தின் பிரதிநிதிக் குழுவைச் சந்தித்தார். பல பரிமாணங்களைக் கொண்ட இருதரப்பு உறவுகள் குறித்தும், வரவிருக்கும் 4ஆவது இந்தியா-ஆப்பிரிக்கா மன்ற உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்தும் தாம் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டதாக, அமைச்சர் தனது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*வானிலை (07)*

தெற்கு ஒடிசா முதல் மன்னார் வளைகுடா வரை, தெலங்கானா, ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக இன்று முதல் அடுத்த 5 நாட்களுக்கு தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல்

மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*விளையாட்டு (03)*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி, டெல்லி அணியை எதிர்கொள்கிறது. ஜெய்பூரில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

கௌதம புத்தரின் பிறந்த நாளான இன்று புத்த பூர்ணிமா நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

உழைப்பாளர் தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மதுரை சித்திரை திருவிழாவின் முதன்மை நிகழ்ச்சியான கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் வைபவம் இன்று காலை கோலாகலமாக நடைபெற்றது.

நாட்டின் வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று இந்திய எண்ணெய் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது NV/MS/VM**